**கண்ணதாசன் கூறிச்சென்ற பேரின்ப வாழ்க்கைத் தத்துவக்கோட்பாடு**

*பிரேமா நந்தினி & முனைவர் மோகன தாஸ் ராமசாமி*
*இந்திய ஆய்வியல் துறை*
*மலாயாப் பல்கலைக்கழகம்*

*கவிகளுக்கெல்லம் அரசனான கண்ணதாசன், இலக்கிய உலகில் அழியாத் தடம் பதித்த கவிஞர்களின் வரிசையில் தனக்கென ஓர் உன்னதமான இடத்தைப்பிடித்த தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். 'காட்டுக்கு ராஜா, சிங்கம். கவிதைக்கு ராஜா, கண்ணதாசன்!' இது பெருந்தலைவர் காமராஜர் கண்ணதாசனைப் பற்றி புகழ்ந்து கூறிய வரிகள். 'நான் நிரந்தரமானவன், அழிவதில்லை. எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்பது கவிசக்ரவர்த்தி கண்ணதாசன் தானே கர்வத்துடன் ஒப்புக்கொண்ட வரிகள். அமராவதிபுதூர் உயர்நிலைப்பள்ளியில் வெறும் எட்டாம் வகுப்புவரை மட்டுமே படித்த இவரின் படைப்புகளின் பட்டியல் நம்மை வியக்க வைக்கின்றன.*

*இவர் பல்வேறு துறைகளில் பல்வேறு தலைப்புகளில் பல படைப்புகளை இயற்றியுள்ளார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், காப்பியங்கள், புதினங்கள், தொகுப்புகள், சிற்றிலக்கியங்கள், கவிதை நாடகம், மொழிபெயர்ப்பு, சிறுகதைகள், வாழ்க்கைச்சரிதம், கட்டுரைகள், சமய நாடகங்கள், உரை நூல்கள், திரைக்கதை, திரைவசனம் என எண்ணிலடங்கா இலக்கியப் படைப்புகள் பல வடித்தவர். சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், தென்றல்திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்த பெருமையும் 'சாகித்ய அகாதமி' விருது பெற்ற கவிஞர் என்ற பெருமையும் இவரையே சாரும். பல மாறுபட்ட மதங்களைப் போற்றி இலக்கியத்தின் மூலம் சமத்துவம் வளர்த்த தமிழ்க் கவிஞர் இவர். தன் பலத்தை மட்டுமின்றி, பலவீனங்களையும் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட ஒரே உத்தம கவிஞரும் இவரே.*

*கண்ணதாசனின் இலக்கியப் படைப்புகளில் அவரை ஒரு பெரிய எழுத்தாளராகப் பிரபலப்படுத்தியது அவரது அர்தமுள்ள இந்து மதம் தொடர்களே. தொகுதி 1 முதல் 10 வரை கொண்ட இந்த புத்தகத்தின் முதல் தொகுதி 1973-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகம் இந்துகளின் சடங்குசம்பிரதாயங்கள் மற்றும் கலாச்சாரங்கள் பற்றிய தெளிவான விளக்கத்தை அளிக்கிறது. இத்தொடர்களில், கண்ணதாசன் இந்துகளின் கலாச்சாரம் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் மீது குருட்டுத்தனமான ஆதரவைப் பதிக்காமல் அவறிற்குத் திருப்திகரமான மற்றும் சுவாரஸ்யமான விளக்கம் கொடுத்துத் தெளிவுபடுத்தியுள்ளார். இந்தத் தொடர் கடினமான நேரங்களில் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் நவீனக் காலத்திற்கும் பொருந்தியதாக விளங்குகிறது. இந்துமதத்தில் உள்ள அனைத்துச் சடங்குகளிலும் விஞ்ஞான விளக்கம் மறைத்துள்ளதாக கண்ணதாசன் தெள்ளத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்துமதத்தை அறிய விரும்பும் இலக்கிய விரும்பிகளுக்கு ஒரு சீர்திருத்தக் கவிஞனின் சிறந்த அறிமுக நூலிதுவாகும்.*

*1980-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கண்ணதாசனின் சேரமான் கதாலி, 'சாகீத்ய அகாடமி' விருதை வென்றது, இது காதலின் மோகத்தாலும் மதவெறியை எதிர்த்ததாலும் அழிந்த சேர மன்னனுடைய ராஜியத்தின் சுவாரஸ்யமான கதையைக் கொண்டுள்ளது. சேர சாம்ராஜ்யத்தின் வரலாற்றுப் பதிவுகளோடு காதலும் சமயமும் பின்னிய ஓர் அழகான காவியமான இதில், பல முடிச்சுகள், விசித்திரங்கள் என கதையை விறுவிறுப்புடன் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் தன் கவிதை திறமையோடு கொண்டு சென்றிருக்கிறார் கவியரசர்.*

*'வனவாசம்' என்ற கவிஞரின் படைப்பு அவருடைய வாழ்க்கையில் அரசியல் பயணத்தின் கடினமான காலக்கட்டதின் போது நிகழ்ந்த நல்ல மற்றும் கெட்ட சம்பவங்களின் பிரதிபளிப்பாக அமைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக 'மனவாசம்' என்ற புத்தகத்தையும் அவர் எழுதினார். மனவாசதில் கவிஞர் எப்படித் தன்வாழ்க்கை தன்னாலும் மற்றவர்களாலும் சீரழிக்கப்பட்டது*

*என்பதைப் பற்றியும் தமிழ்நாட்டில் தி.மு.க. (திராவிட முன்னேற்றக் கலகம்) கட்சியை விட்டு விலகியதும் தன் வாழ்வு எப்படி இருந்தது என்பதைப் பற்றியும் ஒளிவு மறைவின்றி வர்ணித்துள்ளார். தனது வாழ்க்கையின் உண்மைகளை இவ்வளவு வெளிப்படையாகக் கூறும் தைரியம் வேறு எந்தவொரு கவிஞனுக்கும் வருமா என்பது கேள்விக்குறியே .*

*'எண்ணங்கள் ஆயிரம்' என்ற காவியத்தில் கண்ணதாசன் நம் பிறப்பின் நோக்கத்தையும் கடவுளின் மதிப்பையும் படிப்பவர் உள்ளம் உருகும் வகையில் அருமையாகக் கூறியுள்ளார். 'அனுபவ மொழிகள்' என்ற நூலில் அவர் காதல், திருமணம், அரசியல் போன்ற தலைப்பில் தன் அனுபவத்தைக் கவிதைச்சாராப் பாணியில் தொன்மையாகக் கோர்த்து அளித்துள்ளார். 'கேள்விகளும் கண்ணதாசனின் பதில்களும்' என்ற நூல் கவிஞரின் கைவண்ணத்தில் பிறந்த மற்றொரு படைப்பாற்றல் மிகுந்த ஒரு விசித்திரமான தொகுப்பாகும். இந்தப் புத்தகமானது கண்ணதாசனிடம் வாசகர்களால் கேட்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் அவர் தனது சொந்த முறையில் மற்றும் பாணியில் எல்லாக் கேள்விகளுக்கும் விடைகளை விவரித்து எழுதியிருக்கும் ஒரு தொகுப்பாகும். மேலும், கவிஞர் தன் வாழ்க்கை அனுபவத்தைக் கதையாகக் கூறியிருக்கும் 'வாழ்க்கை என்னும் சாலையிலே' நூல், படிப்போரின் சிந்தனைக்கும் செயலுக்கு அதீத சக்தியைக் கொடுக்கவள்ள ஒரு சிறந்த நூலாக விளங்குகிறது என்று கூறினால் அது மிகையாகாது.*

*கண்ணதசனின் கடல் போன்ற படைப்புகளின் பட்டியலில் மேலே கூறப்பட்டுள்ளவை மிகச் சிறிய துளிகளே. இவ்வாறு பல படைப்புகளுக்கு ஆசானாக இருந்தபோதிலும் கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களின் வரிகளே மக்களிடையே பெரும் வரவேற்பையும் தாக்கத்தையும் எற்படுத்தின என்பது வெள்ளிடைமலை. காலத்தால் அழிக்க முடியாத பல திரைப்படப் பாடல்களைத் தமிழ் மக்களுக்குத் தந்துள்ளார் இவர். 'கலங்காதிரு மனமே' என்று 'கன்னியின் காதலியில்' எழுதியது முதல் பாட்டு. மூன்றாம் பிறையில் வந்த, 'கண்ணே கலைமானே', கவிஞரின் கடைசிப் பாடல். உறவு, பிரிவு, வறுமை,செழுமை, சிறுமை, பெருமை, இன்பம், ,துன்பம், பிறவி, மரணம் என்று மனித வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைக்கும் பல பாடல்களை எழுதியுள்ளார அவர். பக்திப் பாடல்களையும், காதல் பாடல்களையும் எப்படிச் சுவைப்பட எழுதினாரோ, அதற்குச் சற்றும் குறைவில்லாத வடிவில் பல தத்துவப் பாடல்களையும் அற்புதமாக எழுதியுள்ளார் கவியரசர் கண்ணதாசன்.*

*உலக நெறிகளையும் வாழ்க்கை நெறிகளையும் பொருள்படச் சொல்லும் கோலான தத்துவத்தைச் சதாரண மனிதன் கூட எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் திரைப்படப் பாடல் வரிகளின் மூலம் கண்ணதாசன் மக்களுக்கு வாரி வழங்கியுள்ளார். ''துன்பம் வரும் வேலையில் சிரிங்க என்று சொல்லி வச்சாரு வள்ளுவரு சரிங்க'' என்ற வரிகள் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரின் வாக்கின் உள்ளர்த்தமாக சொறிந்துள்ள தத்துவத்தை விளக்குவதாகவும், ''யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே''' என்ற வரிகள் தன்னிலை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்று உணர்த்துவதாகவும், ''வந்தது தெரியும் போவது எங்கே வாசல் நமக்கே தெரியாது, வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கே இடமேது?'' என்ற வரிகள் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்ற மனித பிறப்பு-இறப்புத் தத்துவத்தைத் துள்ளியமாக எடுத்துக் கூறுவதாகவும், பிறக்கும் போதும் அழுகின்றாய்; இறக்கும் போதும் அழுகின்றாய்'' என்று இயற்கையாய் நடக்கும் செயல்களை வைத்து உயரிய கருத்தை மக்களுக்குப் புரியவைப்பதாகவும், ''பாதையெல்லம் மாறிவரும் பயணம் முடிந்துவிடும் மாறுவதைப் புறிந்துகொண்டால் மயக்கம் தெளிந்துவிடும்'' என்று மாற்றம் ஒன்றே மாறாதது என்ற உபதேசத்தைப் போதிப்பதாகவும் அமைதுள்ள பாடல்கள் கண்ணதாசனின் எண்ணிலடங்காக் காலத்தால் அழியாத அற்புதப் படைப்புகளில் சில.*

*கண்ணதாசனின் படைப்புகளின் சிறப்பை உலகிற்கு எடுத்தியம்ப நிறைய கல்வியாளர்கள் தங்கள் முயற்சியை இன்றும் செவ்வனே செய்து வருகின்றனர். பல கோணங்களில் ஆராய்ச்சிகளும் அவற்றின் கண்டுபிடிப்புகளும் அந்நாள் முதல் இந்நாள் வரை வெளிவந்த வண்ணமாக இருக்கின்றன. கண்ணதாசனின் இலக்கியப் படைப்பையொட்டி வெளியிடப்பட்ட முதல் வெளியீடு 1955-ம் ஆண்டில் அருனோதயம் அச்சகத்தின் வெளியீடு ஆகும். அன்றிலிருந்து இன்றுவரை கவிஞரின் இலக்கியப் படைப்புகளையொட்டி பல வெளியீடுகள் வெளிவந்த*

*வண்ணமாக இருப்பினும், அவர் தனது பாடல்களின் மூலம் எடுத்தியம்பியுள்ள தத்துவத்தை ஆராய்ந்து துள்ளியமாக நமக்குக் கூறியுள்ள நூல்களின் எண்ணிக்கை குறைவே.*

*கண்ணதாசனின் பாடல்களில் உள்ள கருத்துகள், உலகிலுள்ள பல தத்துவ ஞானிகளின் தத்துவத்தைத் தழுவியுள்ளதை நாம் உணரமுடிகிறது. தத்துவம் என்றால் கிரேக்க மொழியில் ஞானத்தை விரும்புபவர் என்று பொருள் பெறும். அதனால்தான் கண்ணதாசனுக்கு அதன் மீது அவ்வளவு மோகம் போலும். தத்துவத்தின் தந்தையான சாக்ரடீஸ் (470-399 கி.மு.), சோதனைக்கு ஆட்படாத வாழ்க்கையை வாழ்வதில் ஒரு பயனுமில்லை; வாழ்கையின் முக்கிய நிகழ்வுகளையும் இன்னல்களையும் ஆழ்ந்துநோக்கும் நொடியில்தான் ஆறுதலும் பிறக்கின்றது என்கிறார். இதனைக் கண்ணதாசன் நன்கு உணர்ந்து தன்பாடல்களில் கையாண்டிருக்கின்றார். அவரின் ஒவ்வொரு பாடலையும் வாழ்க்கைப் பாடமாக நாம் தாராளமாக ஏற்றுக் கொள்ளலாம். அது மட்டுமில்லாது அரிஸ்டாட்டில் (384-322கி.மு.), தத்துவமென்பது உண்மை, ஞானம் ஆகிய நோக்கங்களின் மீது ஏற்படும் ஆச்சரியத்தில் தொடங்கி, நன்னெறி மற்றும் அறிவுசார் நேர்மையுடன் வாழ்ந்த வாழ்க்கையில் முடிவுபெறுகிறது என்று கூறுகிறார். இந்தத் தத்துவத்தையொட்டி பற்பல வாழ்க்கைக்குத் தேவையான அற்புதமான கருத்துகளையும் தன் பாடல்களில் கவியரசன் பாரிவள்ளல் போல் வாரி வழங்கியுள்ளார். கம்பனின் 'இராமாயணமும்', கண்ணனின் 'கீதை'யும் கண்ணதாசனின் கருத்துகளை தாங்கி நிற்கும் தராசாக பல பாடல்களில் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு பல தத்துவங்களைத் தன்னுள் கிரகித்துக்கொண்டு வாழ்க்கைக்குப் பொருந்தக்கூடிய பல புதிய தத்துவங்களையும் கவிஞர் கூறத் தவரவில்லை.*

*கண்ணதாசன் நமக்கு விட்டுச்சென்ற தத்துவங்களில் உச்சமாக விளங்குவது ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் நிலையான பேரின்பத்தை அடைய கூறியுள்ள சூட்சுமமே. வாழ்க்கையின் தத்துவத்தை நான்கே வரிகளில், மனிதனின் வாழ்க்கைப் பருவத்தை நான்காகப் பிரித்து, இன்பம் என்றால் என்ன? உண்மையில் எது இன்பம்? எது சிற்றின்பம்? எது பேரின்பம்? என்ற வாழ்க்கையின் சாராம்சங்களை, வாழ்க்கையில் அடங்கியிருக்கும் மாபெரும் சூட்சுமத்தைப் பாமரனும் விளங்கிக் கொள்ளும் வகையில் எளிமையான மொழியில் கீழ்வரும் வரிகளில் 1960-ம் ஆண்டில் அவர் கைவண்ணத்தில் வெளிவந்த இப்பாடலில் கூறியுள்ளார்.*

*''அன்னையின் கையில் ஆடுவதின்பம்*
*கன்னியின் கையில் சாய்வது இன்பம்*
*தன்னையறிந்தால் உண்மையில் இன்பம்*
*தன்னலம் மறந்தால் பெரும் பேரின்பம்''*

*ஒரு பச்சிளங் குழந்தைக்கு தன் அன்னையின் தாலாட்டில் அவர் கையால் தொட்டிலாட்ட தன்னை மறந்து துயில்கொள்ளுவதில் இன்பம் கிடைக்கிறது. இந்தப் பருவதில் அந்த மழலை மற்றவரைச் சார்ந்து இருப்பதில் தான் இன்பம் காண்கிறது. உலக மக்கள் அனைவரும் போற்றும் மிக உயர்ந்த உன்னத உறவு தாயுறவாக இருந்தபோதிலும், காதல் அந்தத் தாயுணர்வையும் கடந்தது என்று கூறுகிறார் கவிஞர். அதனால்தான் அரும்புமீசை முளைத்து இளைஞனானதும் தன் மனதுக்குப் பிடித்த துணையுடன் இருப்பதிலும் பொழுதைக் கழிப்பதிலும் மனிதன் அதீத இன்பம் காண்கிறான் என்கிறார். இப்பருவதில் அவன் தன் உண்ர்ச்சிகளுக்கு அடிமையாவதில் இன்பம் காண்கிறான்.*

*''காதல் உன்பால் இல்லை என்றால்*
*கன்னி உள்ளம் கருகி விடும்*
*தேதி வைத்துச் சேதி சொன்னால்*
*தாய் முகமும் மறந்து விடும்''*

*நாம் இந்தப் பூமியில் ஜனனித்த நாள் முதல் நம் தேவையறிந்து, அன்பும் பாசமும் கலந்தூட்டி வளர்த்த அன்னையை மறக்குமளவுக்குக் காதலுணர்வு வலிமை கொண்டது என்பதைக் கவிஞர் இவ்வரிகளில் பதிவுசெய்கிறார். மேலும் உறவுகள் அனைத்தையும், சுகங்கள் அனைத்தையும் துறந்து, ஒதுக்கவல்லது காதல் என்பதையும் நாசூக்காக இப்பாடலில் செப்பியுள்ளார்.*

*‘மன்னவர் நாடும் மணிமுடியும்*
*மாளிகை வாழும் தோழியரும்*
*பஞ்சணை சுகமும் பால்பழமும்*
*படையும் குடையும் சேவகரும்*
*ஒன்றாயிணையும் காதலர் முன்னே*
*கானல்நீர் போல் மறையோதோ?’*

*வரலாற்றை உற்று நோக்கினால், ஒரு நாட்டின் மிக உயர்பதவியை அடைந்த ஒவ்வொரு மன்னவரும் தனது அரசாட்சியை விரிவுபடுத்தித் தனது ஆதிக்கத்தின் கீழ் உலகமே இயங்க வேண்டுமென்று ஆசைகொண்டிருந்ததும், அப்படிப்பட்ட மன்னர்களையும் காதல் எப்படி ஆட்டிப் படைத்தது என்பதும் புரியும். இந்த வரலாற்று உண்மை கவிஞர் இப்பாடலின் வழி தன் கற்பனைத் திறனைக்கொண்டு அழகான வார்த்தைகளாக வடித்துள்ளார்.*

*‘ஆலமரத்தின் விழுதினைப் போலே*
*அணைத்து நிற்கும் உறவு தந்தாயே*
*வாழைக் கன்று அன்னையின் நிழலில்*
*வாழ்வது போலே வாழவைத்தாயே*
*உருவம் இரண்டு உயிர்கள் இரண்டு*
*உள்ளம் ஒன்றே என்னுயிரே*
*பொன்னை விரும்பும் பூமியிலே*
*என்னை விரும்பும் ஓருயிரே*
*புதையல் தேடி அலையும் உலகில்*
*இதயம் தேடும் என்னுயிரே’*

*இந்த வரிகளில் கவிஞர் காதலிலும் தாய்மை இருப்பதாகக் கூறி, காதலின் பரிமாணங்களைத் தன் கற்பனைகளால் பட்டைத் தீட்டி, சொற்சுவையால் மெருகூட்டி விலையில்லா வைரங்களாக மின்னவிட்டிருப்பதைக் காணலாம்.*

*நம் வாழ்க்கையின் அடுத்த கட்டமாக, ஒரு மனிதன் வாலிப வயதைத் தொட்டதும் வாழ்க்கையில் உயரவேண்டும் என்ற எண்ணம் அவனிடம் மேலோங்குகிறது இதற்கு அவன் தன்னையறிய வேண்டும், தன்னுடைய தகுதி என்ன? தன்னுடைய திறமை என்ன? தன்னுடைய பலம் என்ன? இதனையறிந்து முயற்சியுடன் செயல்பட்டால் அவன் வாழ்க்கையில் முன்னேறி, மேலும் இன்பம் அடையலாம் என்று வகுத்துக்கூறுகிறார் கண்ணதாசன்.*

*“யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்*
*எல்லாம் சௌக்கியமே”*

*தன்னிலை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்று உணர்த்துவதற்கு இப்பாடல் வரிகளை விட மேலான வரிகள் வேண்டுமோ?*

*‘வந்தது தெரியும் போவது எங்கே*
*வாசல் நமக்கே தெரியாது*
*வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த*
*மண்ணில் நமக்கே இடமேது?*
*இரவல் தந்தவன் கேட்கின்றான் அதை*
*இல்லையென்றால் அவன் விடுவானா?*
*உறவைச் சொல்லி அழுவதனாலே*
*உயிரை மீண்டும் தருவானா?*
*கூக்குரலாலே கிடைக்காது இது*
*கோர்ட்டுக்குப் போனால் ஜெயிக்காது அந்தக்*
*கோட்டையில் நுழைந்தால் திரும்பாது…’*


*கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்ற நமது பிறப்பின் உண்மையை எவ்வளவு ஜனரஞ்சகமாகச் சொல்கிறார் கண்ணதாசன். மேலும், மனித பிறப்பு இறப்புத் தத்துவத்தைப் பற்றி இயம்புகையில் அவர் சுருக்கமாக அழகாகக் கவிதை வடிவில் இப்படி கூறுகிறார்.*

*'வாழ்க்கை என்பது வியாபாரம் வரும்*
*ஜனனம் என்பது வரவாகும் அதில்*
*மரணம் என்பது செலவாகும்'*

*தனது பிறப்பு இறப்பின் உண்மையை அறிந்த ஒருவனால் தான் தன்னை அறிய முடியும்; தன்னை அறிந்து செயலாற்றும் ஒருவனால் தான் வாழ்க்கையில் இன்பம் காண முடியும்; இந்த இன்பத்தைப் பெற்ற ஒருவனால் தான் வாழ்க்கையில் நல்ல நிலையை அடைய முடியும். வாழ்க்கையில் ஒரு நல்ல நிலையை அடைந்த பின்பு 'தான்' என்ற அகந்தையை விட்டொழித்து தன்னலம் மறந்து பிறர்நலம் காணப் பாடுபடுவதே பெரும் பேரின்பம் என்றும் மனிதன் தன் பிறவியின் பலனை அப்பொழுதான் அடைய முடியும் என்றும் ஐந்தறிவைக் கொண்டு புலனின்பங்களை அனுபவிப்பது சிற்றின்பம், ஆறாம் அறிவைக்கொண்டு தன்னையறிந்து தன்னலம் துறந்து செயல்படுவதுதான் பேரின்பம் என்கிறார் தத்துவ வித்தகனான கண்ணதாசன்.*

*'ஆசை கோபம் களவு கொள்பவன்*
*பேசத்தெரிந்த மிருகம்*
*அன்பு நன்றி கருணை கொண்டவன்*
*மனித வடிவில் தெய்வம்'*

*என்று எழுதி மற்றவரின் நலனில் அக்கறை கொள்ளும் மனிதனை கடவுளின் வடிவாகவே பார்க்கின்றார் கவிஞர். கடவுளுக்கு நிகராக நம் நிலையை உயர்திக்கொள்வதைவிட ஒரு பேரின்பம் நமக்குக் கிட்டுமா என்பது கேள்விகுறியே. தனிமனித வாழ்க்கையில் பேரின்பத்தை அடைவதற்கு ஒரு தனிக் கோட்பாடினையே வகுத்துத் தந்துள்ளார் கண்ணதாசன் என்பதை அவரின் பாடல்களைத் துள்ளியமாக ஆராய்ந்து பார்ப்பதின் மூலம் நாம் அறிய முடிகிறது.*




**கண்ணதாசனின் பேரின்ப வாழ்க்கைத் தத்துவக் கோட்பாடு**

*கவியரசின் தத்துவங்களை நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக ஏற்றுக்கொண்டு செயல்பட்டால், வாழ்வில் பேரானந்தத்தை அடைவது நிச்சயமே.*

*முடிவுரை*

*தமிழ்த்தாய்க்குக் கிடைத்தற்கரிய எல்லாத் தமிழ்ப்புலமையையும் கண்ணதாசன் ஒருவனுக்கு மட்டுமே வழங்கிவிட்டால் போலும் என்று நம்மை வியக்க வைக்கும் இத்தத்துஞானியின் இந்த ஒரு வாழ்க்கைத் தத்துவம், அவர் மற்ற எல்லாப் படைப்பாளிகளையும் மிஞ்சியிருப்பதற்கு ஒரு சிறுசான்றேயாகும். கவிஞரின் படைப்புகளை நாம் மேலும் ஆராய்ந்து தமிழரிடையே மட்டுமல்லாது அனைத்து புவியோரிடையேயும் அவரின் தத்துவங்களைப் பரவலாகப் பரப்புவதற்கு ஆவனச் செய்ய வேண்டும் என்பது அவசியம் மட்டுமல்ல காலத்தின் கட்டளையும் கூட.*

## References


Jalarajan, S.R .and Muniapan, B (2012). *“Music, Song Lyrics, Philosophy and Human Values:* Exploring Poet Kannadasan’s Contribution to Tamil Community Worldwide”, Journal of Arts, Science & Commerce, Researchers World, Volume 3, Issue Number 4(2), October, pp. 1-12

Kannadasan. K (June, 1955), *Perumpayanam*: Arunodhayam Publications.Maruthi Press, Irayappettai, Chennai-14

Muniapan, B., & Dass, M. (2009). *An Indian leadership perspective from literature works of Poet Kannadasan*. International Journal of Indian Culture and Business Management, 2(3), 326-340.

Nielsen, Kai (2011). *Alienation and Self-Realization*. Philosophy, 48 (183), (Jan., 1973), pp. 21- Published by: Cambridge University Press on behalf of Royal Institute of Philosophy Stable URL: http://www.jstor.org/stable/3749705 Accessed: 27/07/2012 12:56.

Proffessor Doctor Abdul Kareem M. (Oct 1994) Kaviyarasar *Kannadasan Kavithaith Thiram*: Vanathi Publications Sri Parameswary Press, Chennai 600004Irayappettai, Chennai-14

Pojman, P (1997). *Philosophical Traditions: A Text with Readings*. Wadsworth Publishing Company, United States Military Academy

Ravichanthiran (June 1999*), Kaviyarasan Kaaviyam*, Lena Publications, Solar Offset Printers, Kaaraikkudi -2

Seganathan.A (Oct 1975), *Kannadasan oru Kannottam*: Thirunavukkarasu Publication, Nanbargal Press, Chennai- 600018

Somasundaram, O. (2011*). The seeds of creativity and the soil of poet Kannadasan*. *Indian Journal of Psychiatry*, *53*(1), 82.

Tamilppithan M.A (Dec 1991), *Kannithtamil Paadaaykku Kannadasan*: Vaanathi Publication, Kavinkalai Press, Chennai.